**CC.No. 513/2025 ( PW.11 )**

**PW. 11 – செல்வராஜ் (காவல் ஆய்வாளர் – ஓய்வு)**
**த/பெ.**

**நாள். 07.07.2026.**

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். பிரிவு 311 குவிமுச/348 BNSS –ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்.
(எதிரி ஆஜரில்லை, பிரிவு 317 Cr.P.C/355 BNSS ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகள் இறந்து போன நபரின் உறவினர்கள் தான் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை, ஆனால் அவர்கள் அனைவரும் இறந்து போன நபரின் ஊர்காரர்கள் ஆவார்கள். புகார்தாரர் தோணுகாலில் இருந்து எத்தனை மணிக்கு கிளம்பி வந்தார் என்பதனை பற்றி புகாரில் உள்ளதா என்றால் புகாரில் அதைப் பற்றிய தகவல்கள் இல்லை, ஆனால் சுமார் 8 மணி அளவில் நிலையம் வந்து புகார் கொடுத்த விபரம் மட்டும் தான் உள்ளது. அதேபோல் புகார் மனுவில் தோணுகாலில் யாரை வேலைக்கு அழைத்தார்கள் என்ற விபரமும் குறிப்பாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனுவை யார் எழுதினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விசாரணை அதிகாரி எத்தனை மணி அளவில் சம்பவ இடத்திற்கு சென்றார் என்றால் சுமார் 9 மணி அளவில் அவர் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளார். சம்பவ இடத்தில் யார் யாரை விசாரணை செய்தார்கள் என்றால் பார்வை மகஜர் சாட்சிகளான முத்தையா தேவர் மற்றும் அழகர்சாமி ஆகியோரை விசாரணை செய்துள்ளார். சம்பவம் நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால்

சரிதான். சம்பவம் நடந்த இடமானது நான்கு சாலைகள் சந்திக்கும் ஜங்ஷன் என்றால் சரிதான். வக்காணங்குண்டு கிராமம் அருகே நாடக மேடை, டீக்கடை மற்றும் பிற கடைகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவ இடம் அருகில் எப்போதும் ஆள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். அசா.1 புகார் மனுவிலோ, போலீசார் விசாரணையிலோ என்ன கலர் வாகனம் தன் மீது மோதியது என்பதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இறந்து போன நபர் தலைக்கவசம் அணிந்திருந்தாரா இல்லையா என்பதை பற்றி போலீசார் விசாரணையில் தெரிந்து கொண்டோமா என்றால் கோப்புகளில் அதைப் பற்றிய தகவல் எதுவும் இல்லை.

2. நாங்கள் விசாரணை செய்த போது 108 ஆம்புலன்ஸ் அங்கு வந்ததா அல்லது நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லும் முன்னரே விபத்தில் காயமடைந்த நபர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஏற்றி செல்லப்பட்டார்களா என்றால் 108 ஆம்புலன்ஸில் விபத்தில் காயமடைந்தவர்கள் ஏற்றி செல்லப்பட்டார்கள் என்று எந்த விபரமும், ஒரு தனிநபரின் வாகனத்தில் தான் விபத்தில் காயம் அடைந்தவர்கள் ஏற்றி செல்லப்பட்டார்கள் என்ற விபரம் மட்டும் தான் கோப்புகளில் உள்ளது.விபத்தில் காயம்பட்ட நபர்களை யார் தனி நபர் வாகனத்தில் ஏற்றி வைத்தவர்கள் உறவினர்களா அல்லது தனி நபர் சாட்சிகளா என்று என்னால் கூற இயலுமா என்றால் அவரது உறவினர் வாகனத்தில் ஏற்றி வைத்திருக்க வாய்ப்புண்டு.மாதிரி வரைபடத்தில் நான்கு சக்கர வாகனமும் இருசக்கர வாகனமும் விபத்துக்கு உள்ளாகி நின்று கொண்டிருந்ததாக காணப்படவில்லை என்றால் சரிதான், சம்பவ இடம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதிரி வரைபடத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்ற போது தான் விபத்து நடந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தை வைத்து பார்த்தால் சம்பவம் ஆனது கிழக்கு ரோட்டில் தான் நடந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் இருசக்கர வாகனத்தின் உதிரி பாகங்களும் அல்லது நான்கு சக்கர வாகனத்தின் கண்ணாடி

மற்றும் பிற உதிரி பாகங்கள் சிதறி கிடந்தன போல் எந்த வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.இந்த வழக்கை விசாரணை செய்த விசாரணை அதிகாரியானவர் சம்பவ இடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. உண்மையில் விசாரணை அதிகாரி சம்பவத்திற்கு சென்றிருந்தால் எந்த இடத்தில் விபத்து நடந்தது என்று சரியாக கூறியிருப்பார் என்றால் சரியல்ல, விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு சென்ற பின் தான் மாதிரி வரைபடத்தை தயார் செய்துள்ளார். நான்கு சக்கர வாகனம் எவ்வளவு வேகத்தில் வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதியது என்றால் வேகம் பற்றி சரியாக குறிப்பிடவில்லை ஆனால் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் நான்கு சக்கர வாகனத்தை இயக்கி இரு சக்கர வாகனத்தின் மீது மோதிதாக கோப்புகளில் உள்ளது.நான் சொல்வது போல் நான்கு சக்கர வாகனம் அதிக வேகம், அஜாக்கிரதையாக உடனும் வந்திருந்தால் இரு சக்கர வாகனத்தை மோதியப் பின்னர் சுமார் 20 அடியில் இருந்து 50 அடி தூரம் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் தூக்கி எறியப்பட்டு இருப்பார் என்றும், அதை பற்றி மாதிரி வரைபடத்தில் குறிப்புகள் காணப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல, நான்கு சக்கர வாகனம் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையாக தான் வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதியது.விபத்திற்கு உள்ளான இரண்டு வாகனங்களும் ஒரு வார காலம் கழித்து தான் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பப்பட்டது என்றால் நான்கு சக்கர வாகனம் 27.04.2012 ஆம் தேதி ஆய்விற்கு அனுப்பப்பட்டது,

3.இருசக்கர வாகனம் 02.05.2012 ஆம் தேதி ஆய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது.மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பப்பட்ட தபாலில் மதுரையில் இருந்து அருப்புக்கோட்டை செல்லும் இடத்தில் தான் விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.மோட்டார் வாகன ஆய்வாளர் கொடுத்த ஆய்வறிக்கையில் 2 முதல் 4 Column ல் உள்ள தகவல்கள் சட்டப்படி கொடுக்கப்பட்ட தகவல் தான் என்றால் சரிதான்.மோட்டார் வாகன

ஆய்வறிக்கையில் மோட்டார் வாகன ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடத்தில் இருந்த டயர் மார்க் மற்றும், பாகங்கள் சிதறி கிடந்தன என்பது பற்றி எந்த வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இரண்டு வாகனங்களும் RTO அலுவலகத்தில் ஆய்வு செய்தது போல் தான் உள்ளது என்றால் சரிதான்.மோட்டார் வாகன ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் தயார் செய்து அங்கு டயர் மார்க் மற்றும் ஸ்கிட் மார்க் ஆகியவை பற்றி குறித்து, வாகனங்களின் உதிரி பாகங்கள் சிதறி கிடந்தனவா என்பதை பற்றியும் ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தால் மட்டுமே யாரின் அஜாக்கிரதை மற்றும் கவனக் குறைவினால் விபத்து ஏற்பட்டது என்பது தெரியவரும் என்றால் சரியல்ல.மோட்டார் வாகன ஆய்வாளர் சம்பவத்தை பார்வையிடாத காரணத்தினால் அவரது அறிக்கை சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் அவரது அறிக்கை மூலம் எந்தவித பயனும் அரசு தரப்பிற்கு இல்லை என்றால் சரியல்ல.மோட்டார் வாகன ஆய்வறிக்கை சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் பல Column பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் எந்த சாட்சிகளும் எதிரி வாகனத்தை அஜாக்கிரதையாக இயக்கியதாகவும், எதிரி வாகனத்தை அதிவேகமாக ஓட்டியதாகவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. கண்ணுற்ற சாட்சிகள் எதிரிகள் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக வாகனத்தை இயக்கியதாக குறிப்பிட்டுள்ளார்கள். நான் முதல் விசாரணையில் கூறியது போல் சொன்ன நாள், சொன்ன தேதியில் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும், சொன்ன நாள், சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.நான் முதல் விசாரணையில் கூறியது போல் மாதிரி வரைபடம் மற்றும் பிற ஆவணங்கள் முறையாக தயார் செய்யப்படவில்லை என்றும் அவை அனைத்தும் காவல் நிலையத்தில் பின் யோசனையிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும்

இந்த வழக்கிற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி வாகனத்தை கவனமுடன் தான் இயக்கினார் என்றும் எதிரி மீது எந்தவித அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு இல்லை என்றால் சரியல்ல.